**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்தில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கூட்டுத்தாபனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கையின் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் பிரிவு 65 இன் அடிப்படையில் ஒரு சொத்தின் கழிவுப் பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆண்டும் அறிக்கையிடல் காலத்தின் முடிவில் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றாலும், நிறுவனம் சொத்துக்களின் ஆயுட்காலத்தை நியாயமான முறையில் மதிப்பிடவில்லை என்பதுடன், கொண்டு செல்லும் பெறுமதி பூஜ்ஜியமாகியுள்ள ரூபா 2,266,336 பெறுமதியான சொத்துக்கள் அதற்கு அப்பால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த காரணத்திற்காக, அந்த சொத்துகளுக்கான தேய்மானம் கணக்கிடப்படவில்லை என்பதுடன், நடப்பாண்டின் மிகை அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக நடைமுறையில் மீள்மதிப்பீட்டுக்கு தேவையான தகவலை விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்ப முடியவில்லை. இந்த ஆண்டுக்கான அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்யும் பணி ஏற்கனவே நடந்து வருகிறது. | மேலும் பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து புத்தகங்களில் நியாயமான பெறுமதியை காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | நிதிப்பிரமாணம் 386(3) | எழுதப்படும் ஒவ்வொரு காசோலையின் அடியிதழிலும் உறுதிச்சீட்டு எண்ணைக் குறிப்பிட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அந்த நிறுவனம் அதற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | எழுதப்பட்ட காசோலைகளின் அடியிதழில் தற்போது திகதி, காசோலை பெறுபவரின் பெயர், தொடர்புடைய கணக்கு மற்றும் தேவையான தொகை ஆகியவை | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு முழுமையாக பராமரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறிப்பிடப்படுவதுடன், அந்த அடியிதழில் ஒரு தனி ஆவணத்தில் திகதி, உறுதிச்சீட்டு எண், காசோலை எண், காசோலை பெறுநரின் பெயர், தொடர்புடைய கணக்கு, தேவையான தொகை, காசோலையில் கையொப்பமிட அங்கீகரிக்கப்பட்ட இரு அதிகாரிகளின் கையொப்பங்களுடன் பராமரிக்கப்படுகிறது. | |
| (ஆ) | வியாபார தீர்வைவரி மற்றும் கொள்கைப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 திசெம்பர் 10 ஆந் திகதிய 1/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (1)(எ) ஆம் பிரிவு | அரச முயற்சியொன்றில் உயர் பதவி வகிக்கும் 12 ஆண்டுகள் நிறைவடைந்த நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு வரியில்லா வாகன உரிமம் பெற முடியும் என்று கூறப்பட்டாலும், அதற்கு மாறாக ஆணைக்குழுவின் பணிப்பாளரினால் 2011 ஜுன் 08 ஆம் திகதி வரியற்ற வாகன அனுமதிப்பத்திரத்தில் வாகனமொன்று இறக்குமதி செய்யப்பட்டது. அவரது நியமன திகதி 2003 ஜுலை 31 ஆம் திகதி ஆக காணப்படுவதுடன், வரியில்லா வாகனம் இறக்குமதி செய்யப்பட்ட நாளன்று அவரது சேவைக் காலம் சுமார் 08 ஆண்டுகள் ஆகும். மீளாய்வாண்டில் இறுதி வரை இது தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அல்லது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பீடுகளை வசூலிக்க ஆணைக்குழு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | இது குறித்து முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டு, அதன் பரிந்துரைகளை பரிசீலித்த பிறகு, 2020 ஜுலை 1 ஆந் திகதி குறித்த உத்தியோகத்தர் சம்பளமற்ற இடைநீக்கம் செய்யப்பட்டு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டது. முதற்கட்ட விசாரணையைத் தொடர்ந்து தற்போது முறையான ஒழுக்காற்று விசாரணை நடைபெற்று வருவதாகவும், அது முடிந்தவுடன் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கையை முடித்து அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தால், அதை விரைந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தும் அதிகாரச்சட்டத்தின் 5(ஆ) பிரிவு | பிரிவின் பிரகாரம், பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில், கடந்த வருடம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பணிகள் பற்றி மீளாய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்க வேண்டும் எனினும், 2019 ஆண்டுக்கான அறிக்கை 2021 யூலை 15 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020 இல் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் காரணமாக, 2019 இல் தகவல் சேகரிப்பு எதிர்பாராதவாறு தாமதமானது. இதன் விளைவாக, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான ஒரே நேரத்தில் தரவு சேகரிப்பு 2021 இல் நடந்து வருவதுடன், எதிர்காலத்தில் அந்த அறிக்கையை நிறைவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | சட்டத்தின் ஏற்பாபடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டுக்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 3,308,036 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 5,347,865 ஆகும். அதன் பிரகாரம், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 2,309,829 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு உடன்படிக்கைச் சேவைகளுக்கான கொடுப்பனவுகள் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 3.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிராகரம் கணக்காண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்கு பின்னர் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய | 2019 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி இடம்பெற்ற 212 ஆம் ஆணைக்குழுவின் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், ஆண்டறிக்கையின் பிரதியொன்று 2020 செப்தம்பர் 21 ஆந் திகதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. தற்போது மொழிப்பெயர்ப்பு பணிகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும், 2019 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை 2021 யூலை 15 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்காலரத்தில் அச்சிடப்பட்ட 270 பிரதிகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பணிகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. | |

**3.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் கடமைகளை பரிசோதிப்பதற்காக உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட வேண்டும் என ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழுவினால் அதற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் ஆணைக்குழுவின் கடமைகள் தொடர்பில் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பதவியணியால் முகாமை செய்வதற்கு 2020.08.11 ஆந் திகதிய MTR2/14/NASTEC/Car/Vol II ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், எதிர்காலத்தில் நிறுவன ஊழியர்களை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், உள்ளக கணக்காய்வாளர் பதவியையும் உள்ளடக்க எதிர்பார்க்கப்படுகிறது. | நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு பொருத்தமான தரப்பினரால் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிராகரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 03 மாதங்களுக்கு ஒரு தடைவையேனும் கூட்டப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் 2020 ஆம் | 2020 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள், முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று நிலைமையின் காரணமாக அரசாங்க சுகாதார விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் | சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றி செயற்பட வேண்டும். |

ஆண்டினுள் ஒரு கணக்காய்வுக் குழுக் கூட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

நடத்தப்படவில்லை. ஆனால், மூன்றாம் காலாண்டுக்கான கூட்டம் 2020 ஜுலை 28 அன்று நடைபெற்றது. கடைசி காலாண்டிற்கான கூட்டம் திசெம்பரில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், கொரோனா தொற்றுநோய் காரணமாக மீண்டும் நடத்த முடியவில்லை.